செய்தி வெளியீடு எண்.109 நாள்.31.08.2021

தமிழ்நாடு மூன்றாம் பாலினர் நல வாரியத்தின் மூலம் அடையாளம் காணப்பட்டுள்ள குடும்ப அட்டை பெறாத, வாரியத்தின் மூலம் அடையாள அட்டை பெற்றுள்ள மூன்றாம் பாலினத்தவர்களுக்கு ரூ.2000/– வீதம் நிவாரண நிதியுதவி தொகையினை இரண்டு கட்டங்களாக வழங்கிட சென்னை மாவட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு தற்போது சென்னை மாவட்ட சமூகநல அலுவலகத்தில் கோவிட்–19 நிவாரணத் தொகை மூன்றாம் பாலினத்தவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. சென்னை மாவட்டத்தில் இதுவரை நிவாரணத் தொகை பெறாத மூன்றாம் பாலினத்தவர்கள் செப்டம்பர் 15 ஆம் தேதிக்குள் **சென்னை மாவட்ட சமூகநல அலுவலகத்தை** அணுகி நிவாரணத் தொகை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**இத்தகவலை சென்னை மாவட்ட ஆட்சியர் முனைவர்.ஜெ.விஜயா ராணி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

**வெளியீடு**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,**
**சென்னை–01**